# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 35 | March 2023 | Issue 3




**25.03.2023 அன்று இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டம்**

தனிப்பிரதி விலை ரூ.10/-
Per Copy Rs.10/-

ஆண்டு சந்தா ரூ.120/-
Annual Subscription Rs.120/-



மதுரை மாவட்டம் அரசு ஊழியர் சங்கம் சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான பேரணியை நமது மாநில தலைவர் எம்.பி முருகையன் துவக்க உரையாற்றி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்



கோவை மாவட்டத்தில் காவல்துறை தடையை மீறி மாநிலச் செயலாளர் செந்தில்குமார் தலைமையில் மிக எழுச்சியாக நடைபெற்ற பேரணியில் திரளாக பங்கேற்ற தோழர்கள்



திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற ஜாக்டோ ஜியோ மனித சங்கிலி போராட்டத்தில் மாநில பொருளாளர் வெ.சோமசுந்தரம் பங்கேற்றார்

தலையங்கம்

# கடுமையாக பாதிக்கப்படும் மக்கள் சேவை

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை என்பது மக்களோடு மக்களாக விளங்கக்கூடியத் துறையாகும். பொது மக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதோடு, பேரிடர் காலங்களில் மக்களின் உயிரைக் காக்கின்ற உன்னதமானத் துறை. இத்துறையில் உள்ள பேரிடர் மேலாண்மைத்துறையை வலுப்படுத்தி மாவட்டங்களில் தனி அலுவலகமாக இயங்கிட கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ள நிலையில் அப்பிரிவில் உள்ள ரூ.9000 ஊதியம் பெறும் அலுவலக உதவியாளர் பணியிடத்தைக் கூட கலைத்துள்ளதன் மூலம், அரசு தனது உண்மை முகத்தை காட்டத் தொடங்கி உள்ளது.

மாவட்டங்களில் பேரிடர் மேலாண்மைப் பிரிவில் நிரந்தர அடிப்படையில் பணிபுரிவது ஒரு வட்டாட்சியரும் ஒரு உதவியாளரும் மட்டுமே. இதிலும் ஒரு உதவியாளர் பணியிடத்தையும் கலைக்க உத்திரவிட்டுள்ளது, ஊழியர் விரோத நடவடிக்கை மட்டுமின்றி மக்கள் விரோத நடவடிக்கையாகவே பார்க்க வேண்டி உள்ளது. விலை மதிப்பில்லாத மனித உயிர்களோடும் உடைமைகளோடும் விளையாடுவதாகவே இது அமையும்.

பேரிடர் மேலாண்மையில் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாயும் விலைமதிப்பற்ற மனித உயிர்களை காக்கின்றது என்ற அடிப்படையைத் தெரிந்தும் தெரியாமலும், நிதி பற்றாக்குறையைக் காரணம் காண்பித்து வருவாய்த்துறையின் அதிமுக்கிய பணிகளை முடக்குவதை யாராலும் ஏற்க இயலாது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் பணித்தன்மையைக் கருத்தில் கொண்டே இதற்கு முன்பாக பல்வேறு சீர்திருத்தங்களில் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து வருவாய்த்துறைக்கு விலக்கு அளிக்கப்பட்டது. முந்தைய ஆட்சியாளர்கள் வருவாய்த்துறை பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து இருந்ததாலேயே ஆட்குறைப்பு நடவடிக்கைகள், வேலை நியமனத் தடைச் சட்டம், சிக்கன நடவடிக்கைகளிலிருந்து வருவாய்த்துறைக்கு விலக்கு அளிக்கப்பட்டது. இந்த அடிப்படைகள் எதுவும் தெரிந்து கொள்ள மனமில்லாத தற்போதைய ஆட்சியாளர்கள் துறையைச் சீரழிக்க துணிந்துள்ளனர்.

நமது துறையில் உள்ள அநேகப் பணியிடங்கள் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களே. அதன் பிறகு மக்கட் தொகை பன்மடங்கு அதிகரித்துள்ள நிலையில், நீதிமன்ற வழக்குகள், இணையவழிச் சேவைகள், தகவல் அறியும் உரிமைச் சட்டம் என பணிப்பளு பன்மடங்கு அதிகரித்துள்ள நிலையில், இப்பணியிடங்கள் தேவையா என்பதை பரிசீலனை செய்திட தற்போது இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்ட குழு அமைப்பது எப்படி நியாயமாகும். இதனால் இப்பணியிடங்களின் பணி நீட்டிப்பு, மாதாந்திர ஊதியம் பெறுதல் உள்ளிட்ட சிக்கல்களுடன் மக்கள் சேவையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணியிடங்கள் குறைப்பு நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்தையில் அனைத்து கோரிக்கைகளும் ஏற்கப்பட்டது. ஆனால் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு கடந்த 8 மாத காலமாக அலைக்கழிப்பு செய்கிறது. வருவாய்த்துறை அலுவலர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற இரண்டு கட்டப் போராட்டங்களில் 12,000க்கும் அதிகமான அலுவலர்கள் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளனர்.

தமிழக அரசு மேலும் காலதாமதம் செய்யாமல் வருவாய்த்துறை அலுவலர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

அதேபோன்று, பங்களிப்பு ஓய்வூதியம் இரத்து, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான அகவிலைப்படி உயர்வினை தாமதமின்றி வழங்குதல், ஈட்டிய விடுப்பு ஒப்படை ஊதியம் மீள வழங்குதல், அரசுத் துறைகளில் வெளிமுகமைப் பணி முறையை ஒழித்தல் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகள் குறித்து தமிழக முதலமைச்சர் யாதொரு கருத்தும் தெரிவிக்காமல் காலம் கடத்துவது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் மேலும் தாமதிக்காமல் நடைபெற்றுவரும் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி அறிவிக்க வேண்டும். அதுவே சுமூகமாக மக்கள் பணி மேற்கொள்வதை உறுதி செய்யும்! ■



பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற TNROA பிரச்சார இயக்கத்தில் பொதுச் செயலாளர் சங்கரலிங்கம்.

# வருவாய்த் துறையின் மாண்பினைக் காப்போம்

வருவாய்த்துறை என்பதுமே நமக்கு நினைவுக்கு வருவது, வருவாய்த்துறை ஊழியர்களின் கடின உழைப்பும், மக்கள் தொடர்பும் தான். ஒருமனிதன் பிறப்பு முதல் இறப்பு வரையில் ஏதாவது ஒரு நிலையில் வருவாய்த்துறையுடன் தொடர்பு கொள்ளாமல் இருக்க முடியாது. பிற துறையினர் அவர்கள் துறைக்கென பிரத்யேகமாக ஒதுக்கப்பட்ட பணியை மட்டும் பார்க்கும்போது வருவாய்த்துறை ஊழியர்கள் மட்டும் சட்டமும் ஒழுங்கும் பராமரிப்பு, வீட்டுமனைப் பட்டா வழங்கல், சான்றுகள் வழங்குதல், ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களை நடத்துதல், பயிராய்வு மேற்கொள்ளுதல், மக்கள் தொகை கணக்கெடுப்பு, வேளாண்மை கணக்கெடுப்பு, குத்தகை பதிவு, பட்டா மாறுதல் செய்தல், இலங்கை அகதிகளை பராமரித்தல், நில ஆவணங்களை பராமரித்தல், நிலம் தொடர்பான அனைத்து பணிகளையும் பார்த்தல், பிறப்பு இறப்பு பதிவு செய்தல், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்ட பிரிவுகளின் பேரில் நடவடிக்கை எடுத்தல், கள ஆய்வு செய்தல், கட்டிடங்கள் விடுதித் தன்மை செய்தல், குடிமைப் பொருள் வழங்கல், ஆதரவற்றோருக்கு ஓய்வூதியம் வழங்குதல், ஆதி திராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல், டாஸ்மாக் கடைகளை தணிக்கை செய்தல், கனிமவளங்களை பாதுகாத்தல், திரையரங்குகள் தணிக்கை செய்தல், முக்கிய பிரமுகர் வருகைப் பணி பார்த்தல், பேரிடர் மேலாண்மை பணிகள் பார்த்தல், நிலவரி வசூல் செய்தல் என்று இன்னும் சொல்லி கொண்டே போகலாம்.

இத்தனைப் பணிகளையும் பார்ப்பதற்கு வருவாய்த்துறை ஊழியர்களுக்கு கூடுதல் ஊதியம் ஏதும் வழங்கப்படுவதில்லை. எல்லோரையும் போல 24 மணி நேரம் அவருக்கும் உண்டு. அந்த 24 மணி நேரத்தில் பெரும் பகுதியை அரசுப் பணிக்கே செலவிடுவதும், பணிப்பளுவின் காரணமாக விடுமுறை தினங்களில் கூடுதலாக பணி பார்ப்பதும் வருவாய்த்துறை ஊழியரின் இரத்தத்திலேயே ஊறிய பணியாக மாறிவிட்டது.

தீபாவளி, பொங்கல் தினங்களிலும் முறைப்பணி பார்ப்பது மற்ற ஊழியர்கள் குடும்பத்தினரோடு மகிழ்வாக இருக்கும் நாட்களிலும் முறைப்பணி என்ற பெயரில் அலுவலகத்திலேயே கழிப்பது என்ற நிலைதான் ஆதியிலிருந்து தொடர்கிறது. கோப்புகளை தன்பதிவேட்டில் பதிவு செய்தல், நிலுவைத் தன்பதிவேடு பராமரித்தல், பருவ வெளியீடு பதிவேடு, நினைவூட்டு நாட்குறிப்பு பதிவேடு எல்லோரையும் போல் வருவாய்த்துறை ஊழியருக்கும் உண்டு. அவர் இதனை முறையாக பராமரிப்பதில் வல்லவர் மாதந்தோறும் மேலதிகாரிகளின் தணிக்கைக்கும் வைப்பார்.

இவற்றையெல்லாம் தாண்டி மேலதிகாரிகளின் ஆய்வு கூட்டங்களிலே அவரின் பெரும்பாலான பகல் நேரங்கள் சென்று விடுவதால், இரவில் கூடுதல் நேரம் பணி பார்ப்பது என்பது அவருக்கு பழகிப்போன ஒன்றாகிவிட்டது.

இவ்வளவு பணிகளையும் பார்ப்பதற்கு ஒதுக்கப்பட்ட பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படுவதில்லை. பதவி உயர்வில் செல்லும் இடம், இறப்பினால் ஏற்புடும் காலியிடம்

ஆகியவை கூடுதல் பொறுப்பாக மற்றொரு ஊழியருக்கே வழங்கப்படும் என்பதால் அவர் தன் இருக்கை பணியோடு, கூடுதல் இருக்கை பணியையும் பார்ப்பது என்பதால் இரத்த அழுத்தம், மன அழுத்தம், நீரிழிவு உள்ளிட்ட எல்லா உடல் நோய்களும் உள்ளவராக மருந்து மாத்திரைகளுடனேயே வாழ்பவராகவே மாறிவிட்டார்.

இவை அனைத்தும் வருவாய்த்துறை ஊழியர்களின் பெருமையை பாறைசாற்றுபவை. ஆனால் இவரின் கறுப்பு பக்கம் என்பது லஞ்சம் பெறுதல் என்பது, மக்கள் பணியே மகேசன் பணி என்று பணி செய்யும்போது ஒருசிலர் தான் பார்க்கும் பணிக்கு பொதுமக்களிடம் பணம் எதிர்பார்ப்பதும், நேரடியாகவே கேட்பதும், பணம் வராதபோது அதற்காகவே அப்பொதுமக்களின் பணிகளை தாமதப்படுத்துவதும் நடப்பதுண்டு.

*இது ஒரு குடம் பாலில் ஒரு சொட்டு விஷத்தை கலப்பது போன்றது. ஒட்டு மொத்த பாலுமே விஷம் தான் என்று மாறும். பொதுமக்கள் பார்வையில் வருவாய்த்துறையில் லஞ்சம் கேட்பது அதிகமாக உள்ளது. வேலைகள் உரிய காலத்தில் நடப்பதில்லை. இழுத்தடிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளது. இதில் உண்மை இல்லை என்று சொல்லவும் முடியாது. ஆனால் ஒட்டுமொத்த வருவாய்த்துறையுமே இப்படித்தான் இருக்கிறது என்ற முடிவுக்கும் வரமுடியாது.*

சமீப காலமாக பத்திரிக்கைகளில் வரும் செய்திகளை பார்க்கும் போது வருவாய்த்துறை அலுவலர்கள் இலஞ்ச புகாரில் சிக்குவதும், கைதாவதும் நடப்பதைப் பார்க்கிறோம். லஞ்சம் கேட்கும் வீடியோக்கள் சமூக ஊடக வலைதளங்களில் பரப்புவதை பார்க்கிறோம்.

இது ஒரு குடம் பாலில் ஒரு சொட்டு விஷத்தை கலப்பது போன்றது. ஒட்டு மொத்த பாலுமே விஷம் தான் என்று மாறும். பொதுமக்கள் பார்வையில் வருவாய்த்துறையில் லஞ்சம் கேட்பது அதிகமாக உள்ளது. வேலைகள் உரிய காலத்தில் நடப்பதில்லை. இழுத்தடிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளது. இதில் உண்மை இல்லை என்று சொல்லவும் முடியாது. ஆனால் ஒட்டுமொத்த வருவாய்த்துறையுமே இப்படித்தான் இருக்கிறது என்ற முடிவுக்கும் வரமுடியாது.

தற்போது நமக்கு தேவை பணிக் கலாச்சாரம், தனது அரசுப் பணியை நேர்மையுடன் செய்வது, உரிய காலத்தில் செய்வது, சட்டவிதிகளின்படி செய்வது, அரைகுறையாக செய்யாமல் முழுமையாக செய்வது, தனது இருக்கையில் பராமரிக்கப்படும் பொருட்கள் பற்றிய அரசு சட்ட விதிகளை முழுமையாக அறிந்து வைத்திருப்பது என்பது தேவையாக உள்ளது. நினைவூட்டு நாட்குறிப்பு பதிவேட்டை முறையாக பராமரித்தாலே எந்த கோப்பும் நடவடிக்கை எடுக்கப்படாமல் தவிக்கப்பட மாட்டாது. முக்கிய ஆவணத் தொகுப்பு ஒவ்வொரு இருக்கையிலும் பராமரிக்க வேண்டும்.

நாம் மக்கள் ஊழியன் என்பதை மனதிற்கொண்டு சிரமங்களை மனமுவந்து ஏற்றுக்கொண்டு, லஞ்சம் தவிர்த்து நெஞ்சம் நிமிர்ந்து நம் துறையின் மாண்பை தொடர்ந்து காப்போம். நமக்கு தேவையான ஊதிய உயர்வுகள், உரிமைகள் பெற போராடி பெறுவோம். சங்கமே நமக்குத் துணை. தங்கம் செய்யாததை சங்கம் செய்யும் என்பதை கருத்திற்கொண்டு மக்கள் பணி ஆற்றுவோம். ■

கட்டுரை

# தமிழைக் காத்த உ.வே.சாமிநாத ஐயர் என்ற தமிழ் தாத்தா



உ.வே.சாமிநாத ஐயர்

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில் வேங்கட சுப்பையர் மற்றும் சரசுவதி அம்மாள் தம்பதியினருக்கு மகனாக 1855ஆம் ஆண்டு பிப்ரவரி 19ஆம் நாள் பிறந்தார்.

இவரது தந்தை ஓர் இசைக்கலைஞர். உ.வே.சா. அவர்கள் தனது தொடக்கக் கல்வியையும், இசைக்கல்வியையும் சொந்த ஊரில் உள்ள ஆசிரியர்களிடத்தே கற்றுள்ளார். பின்னர் தன் 17 ஆம் வயதில் மயிலாடுதுறை அருகே உள்ள திருவாடுதுறை சைவ ஆதினத்தில் தமிழ் கற்பித்துக்கொண்டிருந்த புகழ் பெற்ற மகாவித்துவான் என அழைக்கப்பட்ட மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டு காலம் தமிழ் பயின்று தமிழறிஞர் ஆனார். துவக்கத்தில் கும்பகோணத்திலிருந்த கல்லூரி ஒன்றில் ஆசிரியராக பணியில் இருந்த உ.வே.சாமிநாதன், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்துள்ளார். உ.வே.சா. அவர்களின் பெரு முயற்சியால்தான் தமிழுக்கு சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, மற்றும் மணிமேகலை என்று நூற்றுக்கணக்கான பல அரிய நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றி பதிப்பித்து, புதுப்பித்து நமக்கு அளிக்க முடிந்தது. தன்னுடைய சொத்துக்களை விற்றும், கடுமையான வறுமையிலும்கூட பல தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். இத்தகைய அரிய சேவைக்காக அவர் பட்ட சிரமங்கள் ஏராளமாக இருந்தாலும் மனம் தளராது இச்சேவையில் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளார்.

சங்க இலக்கியங்கள் பற்றியும், சங்ககால மக்களின் வாழ்க்கையைப் பற்றியும், கலாச்சாரப்-பண்பாடு போன்றவற்றைப் பற்றியும் இன்று நமக்கு துல்லியமாகத் தெரிகிறது என்றால், அதற்கு காரணம் உ.வே.சா.தான் என்பதை தமிழறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வரலாற்று உண்மையாகும்.

இவர் ஏட்டுச் சுவடிகளைப் பார்த்து அப்படியே அவைகளை பதிப்பித்தல் மட்டும் செய்யவில்லை. சிதைந்து, மறைந்து விட்ட அடிகளையும், சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும்படி செய்தவராவார். ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு போன்ற செய்திகளையும் தொகுத்து வழங்கி, இந்த நூல்கள் குறித்து முழு புரிதலுக்கும் வழி வகுத்துள்ளார். அவர் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும், அவர் மறைந்த

காலத்தில் உயர்ந்து நின்ற தமிழின் நிலைக்கும் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருந்துள்ளது.

சீவகசிந்தாமணியைக் கற்றுகொடுக்க முயன்றபோது ஏட்டுச்சுவடியிலிருந்து நூலை மிகுந்த சிரமத்திற்கிடையில் பிரித்து எழுதி, நன்கு உணர்ந்து, கற்று பாடம் உணர்ந்திருக்கின்றார். இந்த நூலை 1887ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்த நூலை பதித்து வெளியிடுவதற்கு பல தமிழ் புலவர்கள், பல தமிழ் அறிஞர்கள் அளித்த ஊக்கமே காரணமாக இருந்ததினால், இப்பணியை அவர் தொடர்ந்து செய்ய காரணமாக இருந்தது என்று தனது குறிப்புகள் மூலம் கூறியிருக்கின்றார்.

உ.வே.சாவின் தந்தையார் தனது குடும்பத்தை நடத்தவதற்கே மிகவும் சிரமப்பட்ட காலத்திலும் கூட, உ.வே.சாமிநாத அய்யருக்கு நல்ல கல்வி கற்பித்து சிறப்பான எதிர்காலத்தை அமைத்துத் தர வேண்டும் என்பதில் தீவிர ஆர்வமும், கவலையும் கொண்டிருந்திருக்கின்றார். பல தமிழ் நூல்களை அவருக்கு முறையாக கற்பித்ததோடு மட்டுமல்லாமல், தனது நண்பரான சிதம்பரம்பிள்ளை அவர்களிடத்திலும் திருவிளையாடற்புராணம் நூலைக் கற்று தேர்ந்திட உதவியுள்ளார். அக்காலத்தில் கற்பது என்பது இன்றைய காலத்தில் உள்ளது போன்று, முறையாக பள்ளியில் அமர்ந்து பாடம் வாரியாக கற்பது போன்று அல்லாமல், பல அரிய தமிழ் நூல்களை நன்கு பயனுற கற்பதே சிறப்பானதாக இருந்துள்ளது.

காகிதம் மற்றும் எழுத்து பலகைப் பள்ளிக்கூடத்திற்கு வராத அந்த காலத்தில் முதலில் மாணவர்கள் மணலில் எழுதிப்பழக வேண்டும். பின் எழுத்தாணியால்தான் ஓலைச்சுவடியில் எழுதக்கற்றுக்கொள்ள வேண்டும். அந்த காலத்தில் எப்பொழுதும் உ.வே.சா.அவர்கள் எழுதுவதிலும், படிப்பதிலுமே அதிகம் ஆர்வம் கொண்டவராக இருந்துள்ளார். உ.வே.சாவின் சிறு வயது காலத்தில், ஆங்கிலத்தில் கல்வி கற்றிருந்தாலும், தமிழ் மீது தீரா காதலை பெற்றிருந்துள்ளார். சிலகாலம் விருத்தாசலம் ரெட்டியாரிடம் உ.வே.சா. தமிழ் கற்று பாடல் எழுதுவதன் நுணுக்கங்களையும் கற்றறிந்து, பல தமிழின் அறிய நூல்களை படித்திருந்தாலும், நன்கு படித்தவர்களிடமும் பாடம் கற்க வேண்டும் என்ற ஆவலினால் தருமபுரம் மீனாட்சி பிள்ளை அவர்களிடம் பாடம் கற்கும் போதுதான் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

உ.வே.சா.அவர்கள் பல செய்யுள்களையும், நூல்களையும் இயற்றியுள்ளார். தந்தையாரின் வறுமையைக்கண்டு, ஒரு பெரிய மனிதரிடம் சென்று நெல் வேண்டுமென்று இயற்றிய செய்யுள்தான் அவரின் முதல் செய்யுள்ளாகும். கலை மகள் துதி, திருலோகமாலை, ஆனந்தவல்லியம்மை, பஞ்சரத்தினம் முதலியன மற்ற நூல்களாகும். பாண்டி நாட்டில் செவந்தியபுரத்தில் வேணுவனலிங்கத்தம்பிரான் கட்டிய மடாலயத்திற்கு சுப்பிரமணிய தேசிக விலாசம் என்று பெயர். இவ்வழகிய மடாலயத்தை சிறப்பித்து பல தமிழ் புலவர்கள் பாடலியற்றி இருந்துள்ளனர். அவர்களில் உ.வே.சா. அவர்களும் 8 பாடல்களை இயற்றியுள்ளார். ஏற்கனவே பாடப்பட்டிருந்த 86 பாடல்களுடன் சேர்த்து திருநெல்வேலி முத்தமிழாகரமென்னும் அச்சுக்கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன்முதலாக உ.வே.சா. புதுப்பித்து தந்திருக்கின்றார்.

> இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்கு தொண்டாற்றியவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் ஆவார். தமது குடும்பம் கடுமையான வறுமையில் இருந்தாலும், விடாத முயற்சியின் பலனாக தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் உலகிற்கு அறியச் செய்தவர்.


சீவகசிந்தாமணி நூலைப் பதிப்பிக்கும்போது, இவர் சேகரித்த அனைத்து தகவல்களையும் தமது நூலில் வெளியிட்டுள்ளார். இவரது தீராத விடாமுயற்சியினால் நூலை நன்கு விளக்குவதற்கு இவர் எடுத்த முயற்சியின் பயனாக அனேக பயனுள்ள தகவல்களும் நமக்கு இன்றளவும் கிடைத்திருக்கின்றன. நூலை பதிப்பிற்கும்போது, அத்துணை தகவல்களையும் சேர்த்தே தந்திருப்பது இவருடைய நூல்களை தனித்து நிற்க உதவியுள்ளது. பழந்தமிழ் நூல்களில் உரையாசிரியர்களில் நச்சினார்கினியர் மிகச்சிறந்த உரையாசிரியர் என்பதில் அய்யமில்லை. ஆனால் இன்று நாம் காணும் உரை உ.வே.சாவால் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

உ.வே.சா. அவர்கள் அந்தக் காலத்தில் பிரதிகளை அச்சில் பதிப்பதற்கு முன்பு ஊர், ஊராகத் தேடி கிடைக்கும் நகல்களையெல்லாம் பெற்று அவைகள் அனைத்தையும் நன்கு படித்து ஒப்பு நோக்கி, இவைகளுக்குள் வேறுபாடு இருக்குமானால் எது சரியானது என்று தீர்மானித்து பதிப்பிக்க வேண்டும். சிதைந்த பகுதிகளின் முழு வடிவத்தையும் தேடி கண்டுபிடிக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லின் பொருள் முழுவதும் விளங்காமல் உ.வே.சா. எதையும் பதிந்ததில்லை. இவர் பிரதிகளை தேடித்தேடி தமிழகம் முழுவதும் ஊர்களுக்கும், உணவு வசதி கூட இல்லாமல் அலைந்து, திரிந்து விவரங்களை சேகரித்து தகவல் ஏராளமாக உள்ளது. அக்காலத்தில் எந்தவித மோட்டார் வாகன போக்குவரத்து வசதிகளும் இல்லாத போதும், நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு பயணம் செய்துள்ளார். பதிவேற்றம் செய்ய முடியாமலும், பாதுகாத்து வைக்க முடியாமலும் இருந்த அந்த காலத்தில் பல அரிய நூல் தீயிட்டும், ஆற்று வெள்ளத்தில் விட்டும் அழித்துவிட்டதை எண்ணி உ.வே.சா. அவர்கள் மிகவும் வேதனையடைந்துள்ளார். இவ்வாறு தேடி, தேடி சேகரித்து வைத்து அதனை பதிப்பித்ததினால் நமக்கு அருமருந்தாக பல அரிய நூல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்கு தொண்டாற்றியவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் ஆவார். தமது குடும்பம் கடுமையான வறுமையில் இருந்தாலும், விடாத முயற்சியின் பலனாக தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் உலகிற்கு அறியச் செய்தவர். உ.வே.சா. அவர்கள் 90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப் பதித்தது மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்து ஏடுகளையும் சேகரித்து வைத்துள்ளார். தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களைப்பற்றி இன்னும் கூறிக்கொண்டே போகலாம். இதனால்தான் தமிழுக்கு பெருந்தொண்டாற்றிய தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களுக்கு ஆண்டுதோறும் தமிழக அரசின் சார்பில் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கலந்துக்கொள்ளும் அரசு விழா நடத்தப்பட்டு வருகின்றது என்பதை நாம் அறிவோம்.

- **வெ.சோமசுந்தரம்**, மாநிலப் பொருளாளர்.

# TNROA சங்கக்குரல் குழு கூட்டம் - 11.3.2023 - இம்மாதம் முதல் சங்கக்குரல் இதழை நேரடியாக சந்தாதாரருக்கு அனுப்ப முடிவு




தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கத்தின் "போர்வாள்" சங்கக்குரல் இதழின் மாதாந்திர கூட்டம் 11.3.2023 அன்று மாலை 7 மணி அளவில் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சங்கக்குரல் இதழ் ஆசிரியர் & சங்கக்குரல் குழு தலைவர் எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். சங்கக்குரல் இதழ் வெளியீட்டாளர் சு.சங்கரலிங்கம் கூட்டப் பொருள் குறித்து எடுத்துரைத்தார்.

சங்கக்குரல் குழு உறுப்பினர்கள்/ மாநில நிர்வாகிகள் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் போர்வாளாக விளங்கக்கூடிய "சங்கக்குரல்" மாத இதழை நடப்பு மாதம் முதல் (மார்ச் 2023) நேரடியாக சந்தாதாரர்களுக்கு தபாலில் அனுப்புவது என முடிவு செய்யப்பட்டது. இதில் கூடுதல் செலவினம் ஏற்பட்டபோதும், இதழை உறுப்பினர்களுக்கு கொண்டு சேர்ப்பதில் மாவட்ட மையங்களுக்கு உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு, இம்மாதம் முதல் இந்த நடைமுறை கொண்டு வரப்படுகிறது.

2) சங்கக்குரல் மாத இதழ் தொடர்ந்து வெளிவரும் நிலையில், இதன் சந்தா எண்ணிக்கையை 12,000 ஆக உயர்த்த மாவட்ட மையங்கள் சீரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

3) அனைத்து மாவட்டங்களில் நடைபெறும் இயக்க நடவடிக்கைகள், சங்கம் சார்ந்த நிகழ்வுகள், செயற்குழு/ பொதுக்குழு உள்ளிட்ட நிகழ்வுகளின் புகைப்படம் மற்றும் செய்தியினை

tnroasangakural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிட வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

4) கடந்த 9.3.2023 மாலை ஒரு மணி நேரம் வெளிநடப்பு மற்றும் ஆர்ப்பாட்டம் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மிக எழுச்சியாக/ சிறப்பாக நடைபெற்றுள்ளதை தொடர்ந்து, 23.3.2023 ஒரு நாள் ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு போராட்டத்திற்கான அனைத்து ஆயத்தங்களை முழுமையாக மேற்கொண்டு 14,000 வருவாய்த்துறை அலுவலர்களையும் இதில் கலந்து கொள்ள செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

5) இரண்டாம் கட்ட இயக்கம் - 23.3.2023 "ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு" போராட்டத்திற்கான நோட்டீஸ், பதாகைகள், பிரச்சாரம் உள்ளிட்டவை மேற்கொள்ளப்படாத மாவட்டங்களில் உடன் மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

6) அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து 8.4.2023 அன்று தூத்துக்குடியில் நடைபெறும் மத்திய செயற்குழுவில் இறுதி செய்வதென முடிவு செய்யப்பட்டது.

7) எதிர்வரும் மத்திய செயற்குழுவில் அனைத்து உறுப்பினருக்கான உறுப்பினர் சேர்க்கை, சங்கக்குரல் சந்தா 100% நிறைவு செய்திடவும், அனைத்து நிதி நிலுவைகளை முழுமையாக நிறைவு செய்திடவும் வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

மாநிலப் பொருளாளர் வெ.சோமசுந்தரம் நன்றி தெரிவித்தார்.

மாநில மையம்,
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்
சங்கம் (TNROA).




சேலம் வருவாய் அலகில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வரும் திருமதி. எல்லம்மாள், என்பவருக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பாக வயிற்று பகுதியில் நீர்கட்டிகள் இருந்த நிலையில் அதனை அகற்ற அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்த அறுவை சிகிச்சைக்கான தொகையினைப் போதிய அளவு அரசு காப்பீடு திட்டத்தின் கீழ் பெற இயலவில்லை என்ற காரணத்தினால் சங்கத்தின் உதவினை நாடிய நிலையில் இன்று சகோதரிக்கு "TNROA காப்பீடு திட்டத்தின்" கீழ் மருத்துவ நிதியாக ரூ.25,000/-ம் வழங்கப்பட்டது

# TNROA மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள் 11.2.2023 - இராணிப்பேட்டை

தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 25.3.2023 அன்று இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநில தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் திரு.எஸ்.சங்கரலிங்கம் கடந்த கால நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் திரு.இரா.மங்களபாண்டியன் மற்றும் திரு.J.D.ஜோஷி ஆகியோர் அனுமதி பெற்று கலந்து கொள்ளவில்லை.

அனைத்து மாநில நிர்வாகிகள் தெரிவித்த கருத்துரைகள் & விவாதத்தின் இறுதியாக கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக எட்டப்பட்டன.

1) 4 ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியலை உடனடியாக வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

2) மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் துணை வட்டாட்சியர் உள்ளிட்ட பட்டியல்கள் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் அலுவலர்களின் பணி பாதுகாப்பினை உறுதி செய்து அரசாணை உடன் வெளியிட வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

3) இளநிலை/ முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றம் விதி திருத்தம் அரசாணையை மேலும் தாமதம் செய்யாமல் உடனடியாக வெளியிட வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

4) அலுவலக உதவியாளர், இரவு காவலர் மசால்ஜி பணியிடங்களை நிரப்பிட மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்ப வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

5) மாண்புமிகு அமைச்சர் தலைமையிலான அரசு மட்டத்திலான பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, முதுநிலை வருவாய் ஆய்வாளர்களின் ஒருங்கிணைந்த பணி முதுநிலை உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகள் மீதும் உடன் ஆணைகள் வழங்கிட வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

6) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பணிப்பளு மற்றும் பணித்தன்மையை கருத்தில் கொண்டு அனைத்து நிலை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் & தனி ஊதியம் என வழங்கிட வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

7) மத்திய அரசு ஊழியர்களுக்கு 1.1.2023 முதலாக அறிவிக்கப்பட்டுள்ள 4% அகவிலைப்படி உயர்வை, தமிழக அரசு ஊழியர்களுக்கும் தாமதம் இன்றி வழங்கிடவும், தேர்தல் வாக்குறுதியான பங்களிப்பு ஓய்வூதியம் ரத்து குறித்து நடைபெற்று வரும் சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே அறிவித்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

8) துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தங்களில் இட ஒதுக்கீட்டிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்க தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது. இதில் இட ஒதுக்கீடு பாதிக்கப்பட்டிருப்பின் அதனை மீள சரி செய்திட முறையீடு செய்வது என முடிவு செய்யப்பட்டது. பட்டியல்கள் திருத்தத்தின்போது அதிகமான பணியிறக்கம் பாதிப்புகள் காரணமாக, ஒவ்வொரு ஆண்டிற்கான அனுமதிக்கப்பட்ட காலியிட மதிப்பீட்டு அறிக்கையை (Estimate of Vacancy) குறைக்க கூடாது என முறையீடு செய்ததை, இட ஒதுக்கீட்டிற்கு எதிரானதாக உள்நோக்கத்தோடு சித்தரிக்கும் ஆணையரக அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க முறையிடுவது என முடிவு செய்யப்பட்டது.

9) வருவாய்த்துறை அலுவலர்களை பல்வேறு காரணங்களைக் கூறி மாநில அளவில் மாறுதல் செய்வதற்கான கருத்துருக்களை ஆரம்ப நிலையிலேயே கைவிட வலியுறுத்துவதென என முடிவு செய்யப்பட்டது.

10) வருவாய்த் துறையில் உள்ள பணி அழுத்தத்தை குறைக்கும் முகமாகவும், பொது மக்களுக்கான பணிகளை விரைவாக வழங்கிடவும், ஒவ்வொரு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திலும், துணை வட்டாட்சியர் (சான்றிதழ்) பணியிடத்தை ஏற்படுத்திட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

11) மாவட்ட ஆட்சியர்களின் இசைவுகளை பெற்ற மாவட்ட மாறுதல் நிலுவை இனங்களில், உடனடியாக ஆணைகள் வெளியிட வருவாய் நிர்வாக ஆணையரை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

12) 2023 உறுப்பினர் இணைப்பு கட்டணம், 100% சங்கக்குரல் சந்தா, சேலம் மாநாடு & TNGEA மாநாடு நிதி நிலுவைகள், 2023 நாட்குறிப்பு மற்றும் 2023 நாட்காட்டி உள்ளிட்ட நிலுவைகளை முழுமையாக வருகின்ற மத்திய செயற்குழுவில் செலுத்திட மாவட்ட மையங்களைக் கேட்டுக் கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

13) பங்களிப்பு ஓய்வூதியம் இரத்து, மத்திய அரசுக்கு இணையான அகவிலைப்படி உயர்வு, ஈட்டி விடுப்பு ஒப்படை ஊதியம் மீள வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அனைத்துத்துறை ஊழியர் போராட்டக் குழுவின் சார்பில் வருகின்ற 28.3.2023 அன்று நடைபெறும் "ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில்" வருவாய்த்துறை அலுவலர்கள் முழுமையாக பங்கெடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

14) வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை தமிழக அரசு தாமதம் செய்து வரும் நிலையில் இவைகளை வென்றெடுக்க சரியான திட்டமிடலை, வருகின்ற 8.4.2023 அன்று தூத்துக்குடியில் நடைபெறும் மத்திய செயற்குழுவில் மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

மாநில நிர்வாகிகள் கூட்டத்திற்கு இறுதியில் ராணிப்பேட்டை மாவட்டத் தலைவர் திரு.பாபு, மாவட்டச் செயலாளர் திரு.குமார், மாவட்டப் பொருளாளர் திரு.செல்வகுமார் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகளுடன், இராணிப்பேட்டை மாவட்டம் சார்ந்த இனங்கள் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மாநில பொருளாளர் திரு.வெ.சோம சுந்தரம் அனைவருக்கும் நன்றி கூறினார். ■



திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டத்தில் நடைபெற்ற வெளிநடப்பு ஆர்ப்பாட்டத்தில் மாநிலத் துணைத்தலைவர் இரா.மங்களபாண்டியன் ஆர்ப்பாட்ட உரை



நாமக்கல் மாவட்டம்,தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம்

ஆங்கில கட்டுரை

# The demand for the Old Pension Scheme

The Union Finance Ministry's reiteration in the Rajya Sabha recently, of the legal position, i.e., the absence of any provision to allow the accumulated corpus of members of the National Pension System (NPS) to be "refunded and deposited back" to States, should have a deterrent effect on those States contemplating a return to the Old Pension Scheme (OPS). The Ministry's stand reflects what the Pension Fund Regulatory and Development Authority (PFRDA) Act, 2013, the PFRDA (Exits and Withdrawals under the National Pension System) Regulations, 2015, and other regulations say. The Centre has also been making it clear, for the right reasons, that it is not considering any proposal to restore the OPS. As experts and the Reserve Bank of India (RBI) point out, the annual saving in fiscal resources that a reversion to the OPS entails is short-lived. The potential fiscal benefit would be overtaken by the huge liability later in the form of pension payment. The former RBI Governor, D. Subbarao, even called the idea "regressive", with more privilege for government servants than the public, many of whom have no social safety net.

However, the issue refuses to die down, as government employees or those in government-controlled enterprises have been fighting for it. Be it Maharashtra, Uttar Pradesh or Karnataka, staff have struck work, demanding, among others, the re-introduction of the OPS. But their concern about the uncertainty over the amount of pension under the NPS is genuine as they are justified in aspiring for a quality retired life. The NPS, despite being PFRDA regulated, is a market-linked and defined contribution product, while the OPS is a defined benefit pension scheme, where beneficiaries generally get 50% of their final salary, and the whole cost is borne by the government. So, the flat rejection of the demand for the OPS would only exacerbate the situation. It is time that the Centre formulated a scheme that combines features of the old and the new. While retaining the element of employees' contribution, the scheme can have higher contributions by the government, which should also step in if the returns do not ensure the prescribed minimum pension amount. A proposal by Andhra Pradesh last year deserves attention. Holding on to the contributory character of the NPS, the proposal guarantees 33% of basic pay. If required, it can be improved upon to suit the requirements of other States too. Better health facilities that include a liberal insurance scheme can be considered. On their part, the employees should be both pragmatic and willing to resolve the issue. ■

# பேருந்துப் போக்குவரத்து அரசுடைமையான வரலாறு!

**செ**ன்னையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பேருந்துகளை இயக்குவதற்கான அனுமதியைத் தனியாருக்கு வழங்க தமிழ்நாடு அரசு முடிவெடுத்திருப்பதாக வெளியான செய்தி வாதப் பிரதிவாதங்களை எழுப்பியிருக்கிறது.

பேருந்துப் போக்குவரத்தைத் தனியாரிடமிருந்து தமிழ்நாடு அரசின் ஆளுகைக்குள் கொண்டுவந்த முற்போக்கு நடவடிக்கையை அரை நூற்றாண்டுக்கு முன்பே எடுத்த திமுக அரசு, தற்போது மீண்டும் தனியாரை நுழைப்பது சரியா என்ற கேள்வி தீவிரமடைந்துள்ளது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் பேருந்துப் போக்குவரத்து அரசுடைமையாக்கப்பட்ட வரலாற்றை நினைவூட்ட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

சுதந்திரத்துக்குப் பிறகு சில மாநிலங்கள் மட்டுமே பேருந்துப் போக்குவரத்தை அரசுடைமையாக்கும் நடவடிக்கையில் இறங்கின; அதற்கு முன்னோடி தமிழ்நாடுதான். பேருந்துப் போக்குவரத்தின் முக்கியத்துவம் கருதி 1956இல்தான் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை உருவாக்கப்பட்டது. மூன்றாண்டுகள் கழித்து 192 கி.மீ. தொலைவுள்ள தடங்களுக்கு விரைவுப் போக்குவரத்தை அரசு அறிமுகப்படுத்தியது.

### சோமசுந்தரம் குழு

1967இல் திமுக ஆட்சிக்கு வந்ததும் பேருந்துத் தடங்களை அரசுடைமையாக்கும் நடவடிக்கைகள் தீவிரம் பெற்றன. குறிப்பாக, மு.கருணாநிதி இரண்டாவது முறையாக முதலமைச்சரானதும் 1971இல் சோமசுந்தரம் குழுவை அமைத்தார்.

அக்குழு அளித்த பரிந்துரையின்படி 120 கி.மீ. மற்றும் அதற்கு அதிகமான தொலைவு கொண்ட சாதாரண, விரைவுத் தடங்களை முதல் கட்டமாகவும், சென்னையுடன் இணைக்கப்பட்ட தடங்களை இரண்டாம் கட்டமாகவும், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தடங்களை மூன்றாம் கட்டமாகவும் அரசுடைமையாக்குவது என்று முடிவுசெய்தது அரசு. அதன்மூலம் தமிழ்நாட்டில் பேருந்துகள், பேருந்துத் தடங்கள், பேருந்துக் கழகங்கள் மெல்ல மெல்ல அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன.

அதைத் தொடர்ந்து 1956 கம்பெனிகள் சட்டத்தின்படி போக்குவரத்துக் கழகங்களைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியது. அரசின் சார்பில் பல போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டதற்கு இதுதான் ஆரம்பப்புள்ளி. 1972 ஜனவரி 1 அன்று முதன்முறையாக 'பல்லவன் போக்குவரத்துக் கழகம்' உருவானது. அதே வேகத்தில் தனியாரிடம் இருக்கும் பெரிய பேருந்துக் கழகங்களைக் கையகப்படுத்தத் தயாரானது தமிழ்நாடு அரசு.

### அரசுடைமையான பேருந்துகள்

ஐம்பதுக்கும் அதிகமான பேருந்துகளை வைத்திருக்கும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பேருந்துகளையும் அவை தொடர்பான சொத்துகளையும் கையகப்படுத்துவதுதான் அரசின் ஆரம்பகாலத்




திட்டம்.

அதன்படி, 346 பேருந்துகளை வைத்திருந்த மதுரை ரோட்வேஸ் நிறுவனம், அரசு உருவாக்கிய பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்துடன் இணைக்கப்பட்டு, அதற்கான தலைமையிடமாக மதுரை அறிவிக்கப்பட்டது. அடுத்தடுத்து பல மாவட்டங்களைச் சேர்ந்த தனியார் பேருந்து நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுப் பேருந்துக் கழகங்களுடன் இணைக்கப்பட்டன.

ஒரு போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் செயல்படும் வகையில் இணைப்பு நடவடிக்கைகள் நேர்த்தியாகவும் கவனமாகவும் கையாளப் பட்டன. திருச்சி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களை இணைக்கும் வகையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் உருவாக்கப்பட்டது ஓர் உதாரணம். சேலம், தர்மபுரி மாவட்டங்களில் கூட்டுறவு மோட்டார் சர்வீஸ் சங்கங்களால் நடத்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களில் இருந்த 46 பேருந்துகளைக் கொண்டு அண்ணா போக்குவரத்துக் கழகம் உருவாக்கப்பட்டது; இந்நடவடிக்கை மளமளவென விரி வடைந்தது.

**முளைத்தது சிக்கல்**

1973இல் தமிழ்நாடு பொதுப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப் படுத்துதல்) சட்டம் (Tamil Nadu Stage Carriages and Contract carriages (Acquisition) Act) என்கிற சட்டத்தைக் கொண்டுவந்தது தமிழ்நாடு அரசு. அதன்படி, எந்த மாவட்டத்தில் குறைந்த எண்ணிக்கை யிலான பேருந்துகள் உள்ளனவோ அங்கு அரசுடைமை நடவடிக்கையை அமல்படுத் துவது; அதன்பிறகு அடுத்தடுத்து ஏறுவரிசையில் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ஐந்தாண்டுகளில் அரசுடைமை யாக்கலை முழுமைப்படுத்துவது எனத் திட்டமிடப்பட்டது.

அதன்படி, 1973 ஜனவரி 14 அன்று நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 19 தனியார் போக்குவரத்துக் கழகங்கள் அவற்றிலிருந்த 121 பேருந்துகளோடு அரசுடைமையாக்கப் பட்டன. இந்த இடத்தில்தான் சிக்கல் முளைத்தது. பேருந்துப் போக்குவரத்தை அரசுடைமையாக்குவதற்கு எதிராக நீதிமன்றங்களில் ஏராளமான ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சென்னை உயர் நீதிமன்றம்,

பேருந்துப் போக்குவரத்தை அரசுடைமை யாக்கும் தமிழ்நாடு அரசின் சட்டத்தைச் செல்லாததாக அறிவித்தது.

## தீர்வு தந்த தீர்ப்பு

என்றாலும், தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது தமிழ்நாடு அரசு. ஏறக்குறைய பத்தாண்டு களுக்குப் பிறகு அந்தச் சட்டம் செல்லும் என்று அறிவித்தது உச்ச நீதிமன்றம். வழக்கு நடந்துகொண்டிருந்த காலத்தில் பேருந்துப் போக்குவரத்தை அரசுடைமையாக்கும் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

தீர்ப்புக்குப் பிறகு அரசுடைமையாக்கும் பணி வேகம் பிடித்தது. பின்னாளில் வந்த ஆட்சியாளர்களும் அதில் கவனம் செலுத்தினர் என்பது கவனிக்கத்தக்கது. இப்படித்தான் தமிழ்நாட்டில் பேருந்துப் போக்குவரத்து தனியாரிடமிருந்து அரசின் வசம் வந்தது.

வலுவான இணைப்புச் சங்கிலி கொண்ட அமைப்பாக தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துக் கழகம் இன்று உருவெடுத்து நிற்பதற்குக் காரணம், அது அரசின் ஆளுகைக்குள் வந்ததுதான். இந்தச் சூழலில், தமிழ்நாடு அரசு தற்போது முன்னெடுக்க முயலும் திட்டம் விமர்சனத் துக்குள்ளாவதில் ஆச்சரியமில்லை. அரசு அதிகபட்ச கவனத்துடனும் தீவிர கரிசனத்துடனும் அரை நூற்றாண்டுக்கு முன்பு காட்டிய அதே தொலைநோக்குப் பார்வையுடனும் அணுக வேண்டிய விவகாரம் இது.

**- ஆர்.முத்துக்குமார்**

'தமிழக அரசியல் வரலாறு'
நூலாசிரியர்;




3.2.23 அன்று மதுரை மாவட்ட ஜாக்டோ ஜியோ கூட்டத்தில் கலந்து கொண்டு, எதிர்வரும் இயக்கங்களை எழுச்சியாக நடத்த வேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

# ஓய்வூதிய பலன்கள் பறிப்பு

தமிழ்நாடு அரசு சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் 28.11.2001 அன்று வெளியிட்ட அரசு ஆணையில் அரசு ஊழியர்களின் ஒப்படை விடுப்பு, போனஸ் ஆகியவை பறிக்கப்பட்டன. நியாய விலைக் கடையில் விற்கப்படும் அரிசியின் விலை, மண்ணெண்யை விலை கடுமையாக உயர்த்தப்பட்டது. இதற்கு எதிராக ஆங்காங்கே மக்கள் தன்னெழுச்சியாக போராட்டங்களை நடத்தி வந்தனர்.

அரசு ஊழியர்கள் மீதான அரசின் இத்தகைய தாக்குதல்களை எதிர்த்து நிற்க 19.12.2002 அன்று அலுவலர் ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு உருவானது. (ஜாக்டோ ஜியோ) தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், வருவாய்த்துறைக்கு உயர்நிலைக் குழுவில் இடமளிக்க வேண்டும் என்று வற்புறுத்தியும், இந்தப் போராட்டக் குழுவின் உயர்நிலைக் குழுவில் வருவாய்த் துறைக்கு பிரதிநிதித்துவம் வழங்க பிற சங்கங்கள் தயாராக இல்லை. எனினும் ஊழியர்களின் ஒற்றுமைக் கருதி தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம் போராட்டக் குழுவில் இணைந்தது. இந்தப் போராட்டக் குழு பல்வேறு போராட்ட, தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு இறுதியாக 23.10.2002 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது.

இந்த வேலைநிறுத்தத்திற்கான தயாரிப்பு பணிகளை மேற்கொண்டிருந்த காரணத் தினால் இந்த ஆண்டு 16.04.2002ல் நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தத்தில் தமிழக அரசு ஊழியர்கள் பங்கேற்க முடியாமல் போய்விட்டது. அன்றைய தினம் பெருந்திரள் தர்ணா போராட்மாக தமிழகத்தில் நடத்தப்பட்டது.

வேலூரில் 19.10.2002 அன்று நடைபெற்ற தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழு ஜாக்டோ-ஜியோ அறிவித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்பது என முடிவெடுத்தது. வேலைநிறுத்தத்தில் வருவாய்த்துறை அலுவலர்கள் முழுமையாக பங்கேற்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களும், வட்டாட்சியர் அலுவலகங்களும் இழுத்து மூடப்பட்டன. 23.10.2002 முதல் 01.11.2002 வரை நடைபெற்ற இந்த வேலைநிறுத்தத்தில் அரசு கடுமையாக அடக்க முற்பட்டது. இக்காலகட்டத்தில் தமிழகத்தின் முதலமைச்சராக ஜெ.ஜெயலலிதா மீண்டும் பதவி ஏற்றுக் கொண்டிருந்தார். சட்ட மன்றத்தில் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக எதிர்க்கட்சிகள் பேசியபோது முதல்வர் ஜெ.ஜெயலலிதா அரசு உறுதியுடன் எதிர்கொள்ளும் என சூளுரைத்தார். ஆங்காங்கு ஆளுங்கட்சியினர் வேலை நிறுத்தப் போராட்டத்தை சீர்குலைத்திட முனைந்தனர். கோவை மாவட்டம், பொள்ளாச்சி அருகில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர் காசிபாண்டியன் என்பவரின் பள்ளியின் பூட்டை உடைத்து அதை திறந்துபாடம் நடத்த ஆளுங் கட்சியினர் முற்பட்டதை பார்த்து மனம்

உடைந்து அவர் தன்னைத்தானே தீயிட்டு மாய்த்துப் போனார்.

தொலைக்காட்சி பெட்டியில் வேலை நிறுத்தம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை செய்தியாக கேட்டுக்கொண்டிருந்த ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர் முனியசாமி மாரடைப்பால் காலமானார். தேனி மாவட்டத்தில் அப்துல் சத்தார் இதேபோல் மரணமடைந்தார். புதுக்கோட்டையில் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தலைவர்கள், இராஜேந்திரன், மூக்கையா, ஜானகிராமன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சிகள் தமிழகம் முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த அரசு ஊழியர் ஆசிரியர்களிடையே ஆவேசத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் உள்ள எதிர்கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து 01-11-2002 வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக பொதுக்கூட்டம் நடத்திட திட்டமிட்டன. இதனால் அரசு முந்திக்கொண்டு முதல் நாளே, போராட்டக்குழு தலைவர்களை அழைத்துப் பேசியது. பழிவாங்குதல்கள் ஏதுமிருக்காது என்று அரசு தரப்பில் கொடுக்கப்பட்ட உறுதி ஒன்றுடன் வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

விடுப்பு ஒப்படை, போனஸ் போன்ற உரிமைகளை அதிமுக அரசு புறித்ததை எதிர்த்து நடைபெற்ற இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில், தலைமைச் செயலக ஊழியர் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அலுவலக உதவியாளர் சங்கம் ஆகியவை போராட்டத் தயாரிப்பு பணிகளோடு நம்முடன் இருந்தன. ஆனால் வேலைநிறுத்தத்தில் பங்கேற்காமல் விலகி சென்று விட்டன. இத்தகைய நடவடிக்கைக்களுக்காக இவர்கள் பின்னர் வருந்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

தலைமைச் செயலக ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தலில் அந்தத் தலைமை தோல்வியை தழுவியது. மற்ற இரு சங்கங்களில் ஊழியர்கள் தலைமைக்கு கொடுத்த நெருக்கடியின் காரணமாக விரைவில் மீண்டும் போராட்டக்குழுவுடன் இணைந்து வரலாற்று சிறப்பு மிக்க 2003ம் ஆண்டு போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியதாயிற்று.

### ஓய்வூதியப் பலன்கள் பறிப்பு

ஆசிரியர்-ஆசிரியர்களின் போராட்டத்தை அடக்கி விட்டதாக கருதிய, ஜெ.ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திமுக அரசு 19-03-2003ல் பிறப்பித்த ஒரு அரசு ஆணையின் மூலம், ஓய்வூதிய பலன்களை பறித்து ஆணை யிட்டது. ஊழியர் ஓய்வு பெறும் நாளில் பணப்பயனை 50 சதம் ரொக்கமாகவும், 50 சதம் சேமிப்பு பத்திரங்களாகவும் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு உத்தரவை பிறப்பித்தது. ஓய்வூதியம் பெற 30 ஆண்டுகள் பணிபுரிந்தால் போதுமென்ற நிலை மாற்றப்பட்டு 33 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என அரசு ஆணையிட்டது. இத்தகைய அரசின் ஊழியர் விரோத ஆணைகளை எதிர்த்து போராட ஜாக்டோ-ஜியோ முடிவு செய்தது. கடந்த 2002ம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் எட்டி நின்று வேடிக்கைப் பார்த்த சங்கங்கள், ஊழியர்களின் நெருக்கடியை தாக்குப் பிடிக்க முடியாமல், கோட்டோ-ஜியோ என்ற அமைப்பை உருவாக்கி, அதை ஜாக்டோ-ஜியோவுடன் இணைத்து போராட முன்வந்தனர். தமிழ்நாட்டில் முன்னெப்பொழுதும் கண்டிராத இந்த ஒற்றுமையைக் கண்டு இதை முறியடித்திட வரிந்து கட்டிக்கொண்டு அதிமுக அரசு களத்தில் இறங்கியது. ஓய்வூதிய உரிமைகள் பறிக்கப்பட்ட



நிலையில், பொது இயக்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து போராட்டங்களில் பங்கேற்க வேண்டுமென திருவண்ணா மலையில் 29.03.2003 அன்று நடைபெற்ற தமிழ்நாடு வருவாய்த்துறை சங்கத்தின் மத்திய செயற்குழு முடிவெடுத்தது. போராட்டக்குழு 02-07-2003 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொள்ள முடிவு செய்தது.

### வேலை நிறுத்த ஆயத்த மாநாடு

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் இந்த வேலைநிறுத்த போராட்டத்தை வருவாய்த்துறையில் வெற்றிகரமாக நடத்தும் பொருட்டு, 21-06-2003 அன்று, மாநிலத் தலைவர் சுடலையாண்டி தலைமையில், திருச்சியில், கிராம உதவியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் நில அளவர்கள் ஆகிய சங்கங்களின் தலைவர்களை ஒரே மேடையில் அழைத்து பேச வைத்து தமிழகம் முழுவதும் அனைத்து ஊழியர்களுக்கும் எழுச்சியை உண்டாக்கும் வகையில் போராட்ட ஆயத்த மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டில் 3000க்கும் மேற்பட்ட வருவாய்த்துறை அலுவலர்கள், நில அளவைத்துறை ஊழியர்கள் கலந்துகொண்டனர். இக்காலக்கட்டத்தில், தமிழ்நாடு வருவாய்த்துறை, நில அளவைத்துறைச் சங்கங்களின் கூட்டுப் போராட்டக்குழு அமைக்கப்பட்டது. இக் கூட்டமைப்பில், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், நிலஅளவையர்கள் சங்கங்கள் இடம்பெற்றிருந்தன.

இதில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.எல்.ஸ்ரீதரன், அரசுப் பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கு.பாலசுப்பிரமணியன், தலைமைச் செயலக

ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.பாண்டுரங்கன், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் கோ.சூரியமூர்த்தி மற்றும் தமிழக ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் அண்ணாமலை, அலுவலக உதவியாளர் சங்கத்தின் தலைவர் தங்கராஜ் ஆகியோர் கலந்துக் கொண்டு உரையாற்றினர். போராட்டக் குழுவின் உயர்நிலைக் குழுவில் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்திற்கு இடம் தர மறுத்த நிலையிலும், ஊழியர் நலன் கருதி, ஒற்றுமை ஒன்றையே கருத்தில் கொண்டு பொறுப்பை தானாக முன்வந்து ஏற்றுக்கொண்டு, வருவாய்த் துறை இத்தகைய போராட்ட ஆயத்த மாநாட்டை நடத்திக்காட்டியது அனைவ ராலும் பாரட்டத்தக்கதாக அமைந்தது. அரசின் கவனத்தையும் அது ஈர்த்தது.

### வரலாறு படைத்த அரசு ஊழியர் - ஆசிரியர் போராட்டம் (2003)

போராட்ட ஆயத்தங்கள் அரசின் கவனத்தை ஈர்த்ததின் காரணமாக, 27.06.03 அன்று முதல்வர், போராட்டக் குழு தலைவர்களை அழைத்துப் பேசினார். கோரிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் பேசி அறிவிப்பதாக தெரிவித்தார். உடனடியாக கோரிக்கை ஏதும் ஏற்றுக் கொள்ளப்படாததால், வேலை நிறுத்தம் திட்டமிட்டப்படி நடக்கும் என போராட்டக் குழு தலைவர்கள் அறிவித்தனர். ஆனால் அன்று மாலையே அரசு, 01-07-2002 முதல் வழங்க வேண்டிய 3 சத அகவிலைப்படியை 01-07-2003 முதல் வழங்குவதாகவும், தொகுப்பூதியம் பெறும் ஊழியர்களுக்கு முடக்கி வைத்திருந்த 60 சத ஊதிய தொகை வழங்கப்படும் என்றும், ஓய்வு பெறுவோருக்கு பணிக்கொடை முழுவதும் ரொக்கமாக வழங்கப்படும் என்றும் அறிவித்தார். இதன் மூலம் அரசிற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.500 கோடி கூடுதலாக செலவாகும் என செய்திதாள்களில் அரசு அறிக்கை வெளியிடப்பட்டது. போராட்டத்தை எதிர்கொள்ள அரசு தயாரான இதே நாட்களில், தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆயத்த மாநாடுகளில் நடைபெற்று வந்த வேலைநிறுத்த ஊழியர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

வேலை நிறுத்தத்திற்கு முன்னதாக மீண்டும் முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்திட போராட்டக்குழு தலைவர்கள் முடிவு செய்து, 30-06-2003 அன்று முதல்வருக்கு கடிதம் அனுப்பினர். ஆனால் அரசு அதைக் கண்டுகொள்ளவில்லை. அன்று இரவே போராட்டக்குழு தலைவர்களின் வீட்டிற்கு சென்ற காவல்துறையினர் கைது செய்தனர். மாவட்டங்கள் முழுவதும் பல்வேறு சங்கங்களின் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின், மாநில துணைத் தலைவர்கள், ஆர்.கலியமூர்த்தி (தஞ்சை) ஏ.வி.செல்வராஜ் (சேலம்) ஆகியோரும் கைது செய்யப்பட்ட தலைவர்களில் அடங்குவர்.

இந்த கைது நடவடிக்கையை கண்டித்து மாநிலம் முழுவதும் 01-07-2003 அன்று அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் வெகுண்டு எழுந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்னை தலைமைச் செயலகத்தில் ஊழியர்கள் 01.07.2003 காலையிலேயே அலுவலகத்தை விட்டு வெளிநடப்பு செய்து கண்டனக் கூட்டத்தை நடத்தி வேலை நிறுத்தத்தை துவக்கினர். இந்தசெய்தி மாநிலம் முழுவதும் பரவி மறுநாள் அரசு ஊழியர்- ஆசிரியர் வேலை நிறுத்தம் முழுமையாக நடைபெற்றது. காவல் துறையினர் காட்டுமிராண்டிகள் போல செயல்பட்டனர். பெண் அரசு ஊழியர்கள்

ஆசிரியர்களை இழுத்துச் சென்றதும் கைது செய்ததும், அவர்கள் மீது இரவில் அவதூறு வழக்குகள் தொடுத்ததும், கிரிமினல் குற்றவாளிகளைப் போல் அரசு ஊழியர் களை ஆசிரியர்களை நடத்தியதும் வேதனையானது. ஏவிவிட்டால் எகிறி விழுபவர்களே காவல்துறையினர் என்பதை அவர்கள் இக்காலக் கட்டத்தில் நிருபித்தனர்.

**எஸ்மா சட்டம்**

அரசு ஊழியர்களின் ஆசிரியர்களின் போராட்டத்தை முறியடிக்க அதிமுக அரசு 04.07.2003 அன்று டெஸ்மா சட்டத்தை பின் தேதியிட்டு (23-04-2003) பிறப்பித்தது. இந்தச் சட்டத்தின்படி எந்தவித விசாரணையும் இன்றி, 1,70,241 அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை, அரசுப் பணியிலிருந்து பணிநீக்கம் செய்தது. இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த, திமுக தலைவர் மு.கருணாநிதி, மார்க்சிஸ்ட் கட்சி தலைவர் என்.வரதராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ஆர்.நல்லகண்ணு, காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் மீதும் எஸ்மா சட்டம் பாய்ந்தது.

**தடம் புரண்ட போராட்டம்**

தமிழகம் முழுவதும் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் எழுச்சியுடன் அரசின் அடக்குமுறையை சந்தித்துக் கொண் டிருந்தபோது, அரசின் எஸ்மா சட்டத்தை எதிர்த்து, அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில நிர்வாகியான தண்டபாணி என்பவர் 04-07-2003 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். 05-07-2003 அன்று வழக்கு நீதிபதி பி.டி.தினகரன் இல்லத்தில் நடைபெற்றது. இந்த வழக்கில், ஆசிரியர்கள் தலைவர்கள், எஸ்.மூர்த்தி, டி.சுப்பிரமணியன், ந.செந்தாமரை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் தலைவர் டி.ராமச்சந்திரன், அலுவலக உதவியாளர் சங்கத்தின் தலைவர் தங்கராஜ், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் ஆர்.ஜோதி ஆகியோர் தண்டபாணியுடன் சேர்ந்து வழக்கில் சாட்சியமளித்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொண்டால், போராட்டக்குழு தலைவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என உத்தரவிடுவதாகவும், சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்வதாகவும், பணிநீக்க ஆணைகளை இரத்து செய்து ஆணையிடுவதாகவும் தெரிவித்ததின் அடிப்படையில், நீதிமன்றத்திற்கு சென்ற மேற்கண்ட தலைவர்கள் வரலாற்று சிறப்புமிக்க வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொள்வதாக எழுதிக் கொடுத்தனர்.

வழக்கு தொடுப்பது குறித்தோ, வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொள்வது குறித்தோ எந்த மட்டத்திலும் இந்தத் தலைவர்கள் கலந்து ஆலோசிக்கவில்லை என்பதும், வீதியில் போராடி தீர்க்க வேண்டிய பிரச்சனையை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றது சரியில்லை என்றும் பின்னர் விமர்சனங்கள் எழுந்தன.

நீதிபதி தினகரன் என்னவோ சொன்னதைப் போல்தான் தீர்ப்பு வழங்கினார். ஆனால் அடம்பிடித்த அதிமுக அரசு அதை எற்றுக்கொள்ளாமல், இரவோடு இரவாக சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் இல்லத்திற்கு சென்று, இந்த தீர்ப்பின் மீது மேல் முறையீடு செய்து, தடையாணை பெற்றது. 07-07-03 முதல் 11-07-03 வரை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றது. வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி

மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்கள் ஜாமினில் வெளியே வரவும், டிஸ்மிஸ் செய்யபட்டவர்கள் (1,70,000 ஊழியர்கள்) தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தை அணுகி தீர்வு கண்டுகொள்ள லாம் என்ற விநோதமான தீர்ப்பை வழங்கினர். தலைமை நீதிபதியாக இருந்த சுபாஷன் ரெட்டி விசாரணையின் போது தெரிவித்த கருத்துக்களுக்கும் இந்த தீர்ப்பிற்கும் சிறிது கூட தொடர்பு இல்லை.

விசாரணையின்போது அவர், தமிழக அரசு என்ன செய்தது என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது தெரிந்துதான் செய்கிறதா என்றும், தமிழக அரசு பிறப்பித் துள்ள எஸ்மா சட்டம் உங்களுக்கும் பொருந்தும் என்று அரசு வழக்கறிஞரை பார்த்து கோபமாக சொன்னதும், விசாரணையை இழுத்தடிக்க அரசு வழக்கறிஞரை பார்த்து, இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் வழக்கு விசாரணையை பார்த்துக்கொண்டுள்ளார்கள். விரைவில் தீர்ப்பு வழங்க வேண்டும் சொல்ல வேண்டியது எதுவாக இருந்தாலும், எழுதிக் கொடுத்து விடுங்கள் என்று சொன்னதும், இந்த வழக்கில் தன்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு வழக்கறிஞர் மனு தாக்கல் செய்தபோது விளையாடா தீர்கள் என்று தள்ளுபடி செய்ததும், திமுக வழக்கறிஞர் விடுதலையைப் பார்த்து நீங்கள் அங்கம் வகித்துள்ள மத்திய அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது என்று வினவி யதும் அரசுஊழியர்களிடையே நம்பிக் கையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் தீர்ப்போ தலைகீழாக அமைந்துவிட்டது.

### உச்ச நீதிமன்றத்தில் சிஐடியு வழக்கு

சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பிற்கு சிஐடியு சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் டி.கே.ரங்கராஜன், போக்குவரத்து ஊழயர் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை ஏற்றுக் கொண்டு உச்சநீதிமன்றம் விசாரணை செய்தது. வழக்கில் ராஜீவ்தவான், ப.சிதம்பரம் (முன்னாள் நிதியமைச்சர்) ஆகிய வழக்கறிஞர்கள் அரசுஊழியர் - ஆசிரியர் களுக்காக வாதாடினர். இதன் விளைவாக, உச்சநீதிமன்றம், சிலவழக்குகளில் கைது செய்யப்பட்டிருந்த, 6072 ஊழியர்கள் நீங்கலாக ஏனையோர் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டதற்கு வருத்த கடிதம் எழுதிக்கொடுத்து மீண்டும் பணியில் சேரலாம் என தீர்ப்பு வழங்கியது. மேற்கண்ட 6072 வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிபதிகளை நியமிக்க வேண்டும் எனவும் தெரிவித்தது. இதன் அடிப்படையில் மூன்று நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனர். மேலும் இந்த வழக்கில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்ய உரிமை இல்லை என கருத்தும் வெளியிட்டது.

பணியில் சேர்க்க மறுக்கப்பட்ட 6072 அரசு ஊழியர் ஆசிரியர்களில், வருவாய்த் துறையைச் சேர்ந்த 105 துணை வட்டாட்சி யர்கள் உள்பட 255 வருவாய்த்துறை அலுவலர்களும், 66 கிராம உதவியாளர் களும், 8 கிராம நிர்வாக அலுவலர்களும், 9 நில அளவர்களும் அடங்குவர். 14.11.2003 அன்று மூன்று நீதிபதிகளும் அரசிற்கு கொடுத்த அறிக்கையில் 999 அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தவிர ஏனையோருக்கு சிற்சில தண்டனைகள் வழங்கி பணியில் சேரலாம் என குறிப்பிட்டது. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் குமரி மாவட்டத் தலைவர் சாமிக்கண்னு மற்றும் விருதுநகர் மாவட்டத் தலைவர் பிச்சப்பா ஆகியோரை கட்டாய ஓய்வில் அனுப்பலாம் என நீதிபதிகள் அறிக்கை அனுப்பியிருந்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த

வட்டாட்சியர்கள் அய்யணபிள்ளை, சி.டி.சுப்பிரமணியம் ஆகியோர் துணை வட்டாட்சியர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டனர். பணி மறுக்கப்பட்டவர் களில், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின், மாநில துணைத்தலைவர் சேலம் ஏ.வி.செல்வராஜ், மாநிலச் செயலாளர் முகவை நா.சுந்தரமூர்த்தி, சேலம் மாவட்ட தலைவர் என்.சக்திவேல், மாவட்ட செயலாளர் ஏ.ஜீவகாருண்யம், நாகை எஸ்.சிவகுமார், கோவை டி.சிவஜோதி, ஆகியோரும் அடங்குவர். மாநில நிர்வாகிகளும், மாவட்ட, வட்டக்கிளை, முன்னணி ஊழியர்களுமாக 68 ஊழியர்கள் 02-7-2003 முதல் 10-02-2004 முடிய 7 மாதத்திற்கு பணி நீக்கத்தில் இருந்தபோது ஆங்காங்கே மாவட்டங்களில் வருவாய்த் துறை அலுவலர்கள் நிதி திரட்டி, சங்க வித்தியாசமின்றி அவர்களுக்கும் ஊதிய மளித்து பாதுகாத்து வந்தனர்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் முன்னாள் மாநில அமைப்புச் செயலாளாராக இருந்த வி.டி.சுப்பிரமணியம், "புதியபார்வை" என்ற அமைப்பு மூலமாக "பெரியார் கலகக்காரர்" என்ற நாடகத்தை திருப்பூரில் நடத்தி அதன்மூலம் கிடைத்த ரூ.25,000த்தை பணி நீக்கத்தில் இருந்த வருவாய்த்துறை அலுவலர்களுக்கு கொடுத்தார். திருப்பூர் பணி நீக்கத்தில் இருந்த அன்வர்பாட்சா என்ற வருவாய்த் துறை அலுவலர், சாலை விபத்தில் பலியானார். அவரது குடும்பத்தாருக்கு வி.டி.சுப்பிரமணியம் ரூ.5000 கொடுத்து உதவினார்.

அகிலஇந்திய மாநில அரசுஊழியர் சம்மேளனம், இந்திய நாடு முழுவதும் மாநில அரசு ஊழியர்களிடையே தமிழக அரசு ஊழியர்களுக்காக நிதி திரட்டி சுமார் 60 இலட்சம் ரூபாய் நிதி வழங்கியது. தலைமைச் செயலக ஊழியர்கள் உள்ளிட்ட வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை பாதுகாக்க இந்த நிதி உதவியது.

இதற்கிடையே நாடாளுமன்ற தேர்தல் முன் கூட்டியே வரும் என்ற நிலை உருவான தால் 999 அலுவலர்களும் பணியில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்ற அறிவிப்பை சட்டமன்றத்தில், 10-02-2004 அன்று தமிழக அரசு அறிவித்தது. எனினும் அடுத்து நடைபெற்ற,நாடாளுமன்ற தேர்த லில் அதிமுக அரசு ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மட்டுமன்றி, அரிசி விலையை உயர்த்தியும், மண்ணெண்ணெய் விலையை உயர்த்தியும், குடும்ப அட்டைக்கு வருமானத் தின் அடிப்படையில் எச் முத்திரையையும் குத்திய அதிமுக அரசிற்கு மக்கள் தக்க பாடத்தை தேர்தல் மூலம் புகட்டினர்.

### வேடிக்கை பார்த்த மத்திய அரசு

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கடுமையாக அதிமுக அரசால் தாக்குதலுக்கு ஆளானபோது மத்தியில், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு இருந்தது. பிஜேபி கட்சியின் தலைமையில் இருந்த அரசில், வாஜ்பாய் பிரதமராக இருந்தார். அடக்கு முறை குறித்து அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் சுகுமால் சென் அவர்கள் சிஐடியூ மூலம் உலக தொழிலாளர் சம்மேளனத்திற்கு கொண்டு சென்றார். அதுகுறித்து இந்திய அரசிடம் அகில உலக தொழிலாளர் சம்மேளனம் விளக்கம் கோரியது. அதற்கு பதிலளித்த, வாஜ்பாய் அரசு, எல்லாம் நடைமுறையில் உள்ள இந்திய சட்டங்களின்படிதான் நடந்து கொண்டிருக்கிறது என தமிழக அரசிற்கு சான்று வழங்கினார். தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்று மத்திய அமைச்சரவையிலும் இடம் பெற்றிருந்த திமுக செய்வதறியாது விழித்தது. ■

# ஜாக்டோ ஜியோ தீர்மானங்கள் 2.4.2023

திருச்சியில் 2.4.2023 அன்று நடைபெற்ற ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உயர்மட்ட குழு கூட்டத்தில் கு.வெங்கடேசன், இரா.தாஸ் மற்றும் கு.தியாகராஜன் ஆகியோர் கூட்டுத் தலைமை ஏற்றனர். கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. கடந்த 27.03.2023 அன்று தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் - பணியாளர்கள் பல இலட்சம் ரூபாய் ஊதியம் பெறுகிறார்கள் என்று உண்மைக்கு புறம்பாக பேசியதோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சமூக நீதிக்கு எதிராகவும், இளைஞர்களின் அரசு வேலைவாய்ப்பு கனவினை பறித்து, TNPSCயை முழுமையாக ஒழித்துக் கட்டி, அத்துக்கூலி முறையில் நிரந்தரம் பணியிடங்களை அகற்றி, வெளிமுகமை மூலமாக பணியாளர்களை அமர்த்துவதற்காக மனித வள மேலாண்மை துறையால் அரசாணை 115ல் அமைக்கப்பட்ட குழுவின் ஆய்வு வரம்புகளை இரத்து செய்தது சரியில்லை என்று பேசியதற்கு ஜாக்டோ ஜியோ கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

2. கடந்த இரண்டாண்டுகளில், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் சமூக ஊடகங்கள் மற்றும் வலைத் தளங்கள் வாயிலாக ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்கள் மீது வெறுப்புணர்வோடு பேசியதை தற்போது சட்டமன்றத்திலேயே அரங்கேற்றம் செய்ததற்கு கடும் கண்டனத்தை ஜாக்டோ ஜியோ தெரிவித்துக் கொள்கிறது.

3. ஜாக்டோ ஜியோ சார்பாக கோரிக்கை சாசனம் அனைத்து பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களிடம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சார்பாக எதிர்வரும் 7, 8, 9 ஆகிய தேதிகளில் வழங்குவது, அதே நாட்களில் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் அமைச்சர் பெருமக்களையும் அனைத்துக் கட்சி தலைவர்களையும் சந்தித்து கோரிக்கை சாசனம் அளிப்பது

4. ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஏப்ரல் 11ல் தலைமைச் செயலக முற்றுகைப் போராட்டத்தினை நடத்துவது

5. ஜாக்டோ ஜியோ கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளை ஜாக்டோ ஜியோ விடுக்கிறது.

6. ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டங்களை ஏப்ரல் 6ல் நடத்தி கோரிக்கை சாசனம் வழங்குவது மற்றும் கோட்டை முற்றுகை போராட்டங்களுக்குத் திட்டமிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**மாநில ஒருங்கிணைப்பாளர்கள், ஜாக்டோ ஜியோ.**

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



06.02.2023 அன்று புதியதாக பொறுப்பேற்றுள்ள நெல்லை மாவட்ட ஆட்சியரை TNROA சார்பில் மாநில செயலாளர் தலைமையில் வாழ்த்துக்களும், வரவேற்பும், நாட்காட்டி மற்றும் புத்தகமும் வழங்ககப்பட்டது



TNROA திருவாரூர் மாவட்ட மையத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரை சந்தித்து நாட்குறிப்பு வழங்கிய மாநில பொருளாளர் & மாவட்ட நிர்வாகிகள்



TNROA கோவை மாவட்ட மையம் சார்பில் மாவட்ட ஆட்சியரை மரியாதை நிமித்தமாக சந்தித்து சங்கத்தின் நாட் குறிப்பேடு வழங்கப்பட்டது. இதில் மாநில செயலாளர் செந்தில்குமார், மாவட்ட துணைத் தலைவர் சையத் உசேன் மற்றும் மாவட்ட பொருளாளர் ரேவதி ஆகியோர் பங்கேற்றனர்

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL" Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
March 2023 RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002



திண்டுக்கல் மாவட்ட JACTTO-GEO உண்ணாவிரத போராட்டத்தை மாநில ஒருங்கிணைப்பாளரும், TNROA மாநில தலைவருமான தோழர் எம்.பி.முருகையன் துவக்கி வைத்தார்

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TNPMG (CCR) / WPP. 3 / 2015-2017

பெறுநர் :
திரு / திருமதி




18.02.2023 அன்று திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அனைத்துத் துறை போராட்டக் குழுவில் பொதுச் செயலாளர் எஸ்.சங்கரலிங்கம் உரையாற்றினார்

If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
பழைய. 39/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



**Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.**